போடலாம். சிலர் பத்திரிகைகளில் வந்தது சரி என்று எப்பொழுது தங்களுக்கு தோதாக இருக்கிறதோ அப்பொழுது எடுத்துக்கொள்கிறார்கள். எப்பொழுது சரியில்லையோ அப்பொழுது பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பு கிறார்கள். நீதி மன்றத்திலிருக்கிறது என்ற காரணத்தினால் விவா திக்க வேண்டாமென்று சொல்லவில்லை. நேற்றைய தினம் நான் தீர்ப்பு அளித்ததற்குப் பிறகு இரண்டாம் தேதி நடந்தது சரியா என்று மீண்டும் தீர்ப்பு அளிப்பதற்கு அவசியம் இல்லை என்ற தீர்ப்பை அளிக் கிறேன்.

(ஆ) பேரவைத் துணைத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுவது குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ்: துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையின் துணைத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருப் பதாக கேள்விப்படுகிறேன். இந்த நிலையில் தாங்கள் இந்தச் சபையை நடத்திச் செல்வது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜேம்ஸ் ஒரு வழக் கறிஞர். அவர் சட்ட மன்ற விதிமுறைகளைப் படித்துவிட்டு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(4) அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு மேட்டூர் நகரியம், குற்றால நகரியம், மற்றும் பவானிசாகர் நகரியம் (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு மேட்டூர் நகரியம், குற்றால நகரியம், மற்றும் பவானிசாகர் நகரியம் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச் சட்ட முன் வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(3) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவைத் துணைத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுவது குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜேம்ஸ் அவர்களுடைய ஒழுங்குப் பிரச்னைக்கு ஏற்கனவே நாம் பதில் சொல்லிவிட்டாலும் மீண்டும் விளக்க விரும்புகிறேன். அப்படியொரு நம்பிக்கையில்லாத் தீர்மானம்

வந்திருப்பதாக என் கவனத்திற்கு வரவில்லை. சட்ட விதி முறைகளின்படி நம்பிக்கையில்லாத் தீர்மானம் 180 பேர் அல்ல. குறிப்பிட்ட சில பேர்கள் கொடுத்தாலும் நான் பிடித்துத் தொங்கிக் கொண்டு வற்புறுத்திக் கொண்டிருக்கமாட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: துணைத் தலைவர் அவர்களே நான் நன்றாகத் தெரிந்து கொண்டுதான் பேசுகிறேன். அப்படி அவர்கள் இருக்கமாட்டார்கள் என்றுதான் நான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் இன்னொன்றையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் இந்தப் பேரவையில் நான்கு சுவர்களுக்குள்ளே எடுக்கக்கூடிய முடிவுக்குத்தான் கட்டுப்படுவேனே தவிர அங்கும் இங்கும் போக மாட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) அரசின் மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தை முதலமைச்சர் கொண்டு வந்திருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 4–12–1972-ம் நாளன்று முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் முன்மொழிந்த "திரு. மு. கருணாநிதி அவர்களை முதலமைச்சராகக்கொண்ட அமைச்சரவை மீது இப்பேரவை தனது நம்பிக்கையைத் தெரிவிக்கிறது" என்ற தீர்மானத்தை எடுத்துக் கொள்ளலாம்.

Dr. H. V. HANDE: Sir, on a point of order, I would like to know under what rule the Hon. Chief Minister is trying to move this Confidence Motion? When he spoke here the other day when we were not present, he referred to Rajaji as a precedent. What we are right now concerned with is under what rule this is done. Our contention is this. There was a no-confidence motion against the Government much earlier. Without giving an opportunity to make my accusations against the Chief Minister, not against the Chair, when there was a no-confidence motion against the Chief Minister and his Government, somehow or other a situation arose when that no-confidence motion was not allowed to be taken up first. My contention and my charge against the Chief Minister is that he was afraid at that time to allow the no-confidence motion. For, the mover of that motion will get an advantage; first he will speak and then the Government will be replying and finally the right of reply vests with the mover of the no-confidence motion. Here the Chief Minister is at an advantage. After all members have spoken then he replies at the end. In other words he has put himself in an advantageous position by doing this now. Therefore, I would like to know under what rule he is moving this motion of confidence, whether it is ultra vires of our rules or intra vires of our rules